Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 174

வியாழக்கிழமை
19 மே 2022

வைகாசி 05 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16
விலை : ரூ. 50

## தென்னை வீழ்ந்து முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், மே 19
தென்னை மரம் பாறி வீழ்ந்ததில் அதில் சிக்குண்டு ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். 15 ➤

### இனப்படுகொலைக்கு நீதிகோரி

# முள்ளிவாய்க்காலில் நேற்று பெருகியது கண்ணீர் ஊற்று!

## உணர்வெழுச்சியுடன் நடந்த நினைவேந்தல் உறவுகளை நினைத்துக் கதறிய சொந்தங்கள்



படம் :- குமணன்

யாழ்ப்பாணம், மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. முதன்மை நினைவேந்தல் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலிலுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் பெரும் திரளான மக்களின் கண்ணீருக்கு மத்தியில் நடந்தது. 15 ➤



## கொழும்பிலும் நினைவேந்தல்

கொழும்பு, மே 19
கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்பட்டது. சுடரேற்றி அஞ்லி செலுத்தப்பட்டதுடன், முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது.

விரிவு - 03 பக்கம்

## இனப்படுகொலை நாளில் சந்திரிகா அஞ்சலிப்பு



கொழும்பு, மே 19
முப்பது வருட இனப்படுகொலைப் போரில் நாங்கள் இழந்தவை ஏராளம். பிரிந்து இருப்பதை விடுத்து ஒருவருக்கு ஒருவர் ஆறுதலாக இருப்போம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்றுத் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளதுடன், இனப்படுகொலையில் உயிரிழந்தோரை நினைவேந்தும் 15 ➤

## பேரறிவாளன் விடுதலை

சென்னை, மே 19
இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 31 ஆண்டுகளாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த பேரறிவாளனை இந்திய உயர் நீதிமன்றம் நேற்று விடுதலை செய்தது.

விரிவு - 09 பக்கம்

## கோத்தாபய பதவி விலகல் கட்சிகளுடன் பேசியே முடிவு

*பிரதமர் ரணில் தெரிவிப்பு*

கொழும்பு, மே 19
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் பதவி விலகல் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அது தொடர்பில் பெரும்பான்மையினரின் தீர்மானத் 15 ➤

## குளத்தில் வீழ்ந்தவர் பலி!

வவுனியா, மே 19
வவுனியா, வைரவப் புளியங்குளம், குளத்தில் மூழ்கி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15 ➤

## இரு வேறு விபத்துக்களில் நான்கு இளைஞர்கள் சாவு!



யாழ்ப்பாணம், மே 19
யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றுமுன்தினம் நடந்த இருவேறு 16 ➤

## மொட்டு எம்.பிக்களுக்கு மறியல் அரசியல்வாதிகள் பலர் கைது!

கொழும்பு, மே 19
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிசாந்த, மிலான் ஜயதிலக்க ஆகியோர் உட்பட 4 பேரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. கடந்த 15 ➤

## தமிழக உதவிப் பொருள்களுடன் இலங்கைக்கு புறப்பட்டது கப்பல்

சென்னை, மே 19
தமிழக அரசால் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிப் பொருள்களுடன் கப்பல் ஒன்று நேற்று இலங்கையை நோக்கிப் புறப்பட்டுள்ளது. சென்னைத் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட இந்தக் கப்பலின் பயணத்தை, தமிழக முதலமைச்சர் 15 ➤

## இலங்கை அரசியல்வாதிகளுக்கு எந்த உதவிகளும் வழங்காதீர்கள்

*சர்வதேசத்திடம் ஜஸ்மின் சூக்கா வலியுறுத்து*

கொழும்பு, மே 19
இலங்கை அரசியல்வாதிகள் எவரும் சர்வதேச சமூகத்திடம் தொடர்பை ஏற்படுத்துவதையும், அவர்களுக்கு அடைக்கலம் கொடுப்பதையும் நிராகரிக்க வேண்டும் என்று சர்வதேச உண்மை மற்றும் 15 ➤

## நெருக்கடிகளைப் பயன்படுத்தி தேசிய பாதுகாப்பில் அழுத்தம்!

*உசுப்பேற்ற பார்க்கிறார் கோத்தாபய*

கொழும்பு, மே 19
பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுக்குழுக்களும் தனிநபர்களும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை ஒரு காரணமாகப் பயன்படுத்தி, தேசிய பாது 15 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டார் மஹிந்த!



**கொழும்பு, மே 19**

**மே 9 தாக்குதல் சம்பவத்துக்கு பின்னர், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் இரகசியமாக தங்கவைக்கப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச நாடாளுமன்றின் நேற்றைய அமர்வில் பங்கேற்றார். நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவும் சபை அமர்வில் பங்கேற்றிருந்தார்.**

பிரதமராக செயற்பட்ட மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்தும், அவர் பதவி விலகக்கூடாது என வலியுறுத்தியும் மே 9ஆம் திகதி பொதுஜன பெரமுன உறுப்பினர்களால் அலரிமாளிகையில் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்துக்கு வந்திருந்த அரசியல் பிரமுகர்களும், அவர்களின் சகாக்களும் இணைந்து மைனா கோ ஹம, கோத்தா கோ ஹம போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். கூடாரங்களையும் அடித்து நொருக்கி தீயிட்டுக்கொளுத்தினர்.

அறவழிப் போராட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டதால் கொதிப்படைந்த மக்கள், மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவிக்க வந்து அடாவடியில் ஈடுபட்டவர்களைத் தாக்கினர். அன்றிரவு நாடு முழுவதும் வன்முறை வெடித்தது. அலரிமாளிகையையும் ஆயிரக்கணக்கானவர்கள் சுற்றிவளைத்தனர்.

இதனால் மே 10ஆம் திகதி காலை அலரிமாளிகையில் இருந்து, மஹிந்த ராஜபக்ச பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டார். திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் தங்கவைக்கப்பட்டார். அதன்பின்னர் மஹிந்த வெளியில் வரவில்லை. இந்த நிலையிலேயே அவர் நேற்று நாடாளுமன்றம் வருகை தந்தார். ஆளுங்கட்சியின் முன்வரிசையில் சமல் ராஜபக்சவுக்கு அருகில் மஹிந்த ராஜபக்சவுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-44)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இனப்படுகொலை நினைவேந்தல்

யாழ்ப்பாணம், மே 19

மே 18 முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவிடத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் ஒன்றுகூடி முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு அகவணக்கம் செலுத்தினர். முள்ளிவாய்க்காலில் உறவுகளை இழந்த மாணவனால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. தொடர்ந்து மாணவர்கள், விரிவுரையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்களால் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. (க-இ)

## வன்முறைகளில் ஈடுபட்டோரை கட்சிகளில் இருந்து நீக்குங்கள்

கொழும்பு, மே 19

மே 9 ஆம் திகதி வன்முறைகளில் ஈடுபட்ட அனைத்து அரசியல்வாதிகளையும், கட்சிச் செயற்பாட்டாளர்களையும் கட்சிகளில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'மே 9 சம்பவத்தின் பின்னர் அரசியலுக்கு வருவதற்கு புத்திஜீவிகள் அஞ்சுகின்றனர். இதற்கான பாதுகாப்புப் பொறிமுறை வகுக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் ஆயுத பலம் இருப்பவர்கள்தான் அரசியலில் ஈடுபடும் நிலை உருவாகும். சிறந்தவர்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். வன்முறைச் சம்பவங்களுடன் அரசியல் கட்சிகளின் கீழ்மட்ட செயற்பாட்டாளர்கள் தொடர்புபட்டுள்ளனர். மொட்டு கட்சியினரும் தொடர்புபட்டுள்ளனர். தனிப்பட்ட தேவை மற்றும் அரசியல் காரணங்களுக்காக அவ்வாறு செயற்பட்டிருக்கலாம். விசாரணைகளின் பின்னர் கட்சிகளில் இருந்து அவர்களை நீக்கலாம். அதற்கு அனைத்துக் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கும் என நம்புகின்றேன்' - என்றார். (ம-44)



## மஹிந்த ராஜபக்சவை உடன் கைதுசெய்க!

கொழும்பு, மே 19

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவைக் கைதுசெய்ய வேண்டும் என்று வலியுறுத்தி நேற்றுமுன்தினம் புதுக்கடை நீதிமன்ற வளாகத்தின் அருகில் சட்டத்தரணிகளால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

கோத்தா கோ ஹமவில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது வன்முறையை ஏவிவிட்டு நாட்டில் கலவரம் உண்டாகக் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர் கைதுசெய்யப்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் வலியுறுத்தினர். (ம)

## பிரதமர் அலுவலகத்தின் செலவினம் குறைகிறது!

கொழும்பு, மே 19


பிரதமர் அலுவலகத்தின் செலவினங்கள் ஜூன் மாதம் முதல் 50 சதவீதத்தால் குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இந்த நடவடிக்கையின் ஒரு கட்டமாக, பிரதமர் அலுவலகத்தின் சேவைக்காக வேறு அரச நிறுவனங்களில் இருந்து இணைக்கப்பட்டிருந்த 26 பணியாளர்கள் அவர்களது நிறுவனங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஏனைய அரச நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 16 வாகனங்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. (ம)

## உலக வங்கியிடமிருந்து 160 மில்லியன் டொலர்!



கொழும்பு, மே 19

இலங்கையின் நிதிநெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு உலக வங்கி 160 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கைக்கு வழங்கியுள்ளது என்று பிரதமர் ரணில் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்றைய அமர்வில் பிரதமர் மேலும் தெரிவித்ததாவது:-

உலக வங்கி அவசரகால உதவியாக இலங்கைக்கு 160 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. இதில் பெற்றோலியப் பொருள்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் ஆலோசித்து வருகின்றோம் - என்றார். (ம)

## போரை முடிவுக்குக்கொண்டுவந்த படையினரை நினைவுகூருகிறேன்

*நாடாளுமன்றில் நேற்று சஜித் தெரிவிப்பு*
*'13' திருத்தத்தை வைத்தும் சளாப்பல்*

கொழும்பு, மே 19

30 வருடகாலப் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு பெரும் பங்காற்றிய படையினரை இந்த நாளில் நினைவு கூருகின்றேன் என்று நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருடகால போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பெரும் பங்காற்றிய படையினரை இந்த நாளில் நினைவுகூருகின்றேன். அதேபோல வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் கருத்துகளும் பெறப்பட்டு உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். 13 பிளஸ் எனவும், 13 மைனஸ் எனவும் அரசியல் நாடகமாடாமல் 13 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக வழங்கப்பட்ட தீர்வைப் பாதுகாக்கவேண்டும்.

மே 9 ஆம் திகதி நடைபெற்ற சம்பவங்களை நாம் கண்டிக்கின்றோம். வன்முறையுடன் தொடர்புடைய அனைவரும் சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும். மே 6 ஆம் திகதி அவசரகால சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அப்படி இருந்தும் இப்படியான சம்பவம் இடம்பெறுவதற்கு அடிப்படைக் காரணியாக அமைந்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்படவேண்டும். அலரிமாளிகையில் இருந்துதான் வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டது. அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியதால்தான் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது. அரச பயங்கரவாதமும் கட்டவிழ்த்துவிடப்பட்டது. வன்முறையால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது அனுதாபத்தை வெளிப்படுத்திக்கொள்கின்றோம். மே 9 மற்றும் அதற்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்களை நாம் அனுமதிக்கப் போவதில்லை. சிலர் இனவாதத்தை தூண்டுவதற்குக்கூட முற்பட்டனர். பொறுப்புக்கூற வேண்டியவர்கள், தகுதி தராதரம் பாராது சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்' - என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்வெற்றி விழா மண்ணில்

# முதல்முறையாக சிங்கள மக்களும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில்





காலிமுகத்திடல் கடற்கரையில் மலர்தூவி அஞ்சலி



முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறும் பிக்கு

**கொழும்பு,மே 19**
**முள்ளிவாய்க்கால் படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கொழும்பு காலி முகத்திடலில் நேற்று இடம்பெற்றது.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் பதவி விலகக்கோரி அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் 'கோத்தா கோ கம'வில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. சுடர் ஏற்றி, அகவணக்கமும் செலுத்தப்பட்டது. நினைவேந்தல் உரையும் இடம்பெற்றது. இதில் மதகுருமார்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மூவினமக்களும் கலந்துகொண்டனர். நிகழ்வின் இறுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் வழங்கப்பட்டது. போர் முடிந்து 13 வருடங்களின் பின் கொழும்பில் முதன் முறையாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு பகிரங்கமாக நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-22)

# பல்கலைக்கழக மாணவர்கள் பயணித்த பஸ்ஸை நோட்டமிட்ட புலனாய்வாளர்கள்

யாழ்ப்பாணம்,மே 19

முள்ளிவாய்க்கால் நோக்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பயணித்த பஸ்ஸில் ஏறிய புலனாய்வாளர்களால் இருதரப்பினருக்குமிடையில் முறுகல் ஏற்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை ஏற்றுவதற்காக பரந்தன் சந்தியில் பஸ் நிறுத்தப்பட்டது. அதன்போது பஸ்ஸுக்குள் நுழைந்த நபரொருவர் உடனடியாகக் கீழிறங்கி அருகிலிருந்த கடையொன்றுக்குள் சென்றார். இதனால் சந்தேகமடைந்த மாணவர்கள் கடைக்குச் சென்று "யார் நீங்கள்? எதற்காக பஸ்ஸில் ஏறிவிட்டு இறங்கினீர்கள்?" எனக் கேட்டனர். அதற்கு நான் புலனாய்வுப் பிரிவு. முள்ளிவாய்க்கால் செல்லும் பஸ் என்ற அடிப்படையில் ஏறிப்பார்த்தேன் எனக் கூறினார்.

இதனிடையே மாணவர்களுக்கும் புலனாய்வாளருக்கும் இடையே முறுகல்நிலை ஏற்பட்டது.

அவ்விடத்தில் நின்ற மற்றுமொருவர் தானும் புலனாய்வாளர் எனக்கூறி மாணவர்களிடம் மன்னிப்புக் கோரினார்.

இருவரும் தென்மாகாண இலக்கத்தகட்டையுடைய மோட்டார் சைக்கிளில் அவ்விடத்துக்கு வருகைதந்தனர் எனத் தெரிய வந்தது. (க-125)



## இராணுவத்தினருக்கும் கஞ்சி பகிர்ந்தளிப்பு

கிளிநொச்சி,மே 19

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு, விசுவமடுவில், இராணுவத்தினருக்கும் கஞ்சி பகிர்ந்தளிக்கப்பட்டது. முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட பின்னர் வீதியால் சென்றோருக்கும் இராணுவத்தினருக்கும் கஞ்சி வழங்கப்பட்டது. (க-113)




முள்ளிவாய்க்கால் தினத்தில வடக்கு மாகாண சபையில, வெசாக் கொண்டாட்டம் நடக்க இருக்குது எண்டு ஒரு செய்தி வந்ததெல்லோ. அந்தச் செய்தி வந்த அடுத்தடுத்த நாளில முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் குழுவின்ர சார்பில கொஞ்சப்பேர் போய், வடக்கு மாகாண பிரதம செயலாளரைச் சந்திச்சிருக்கினம்.

"மே18 எங்களுக்கு ஒரு துக்க நாள். அப்பிடிப்பட்ட நாளில இப்பிடி வெசாக் கொண்டாட்டத்துக்கு பிளான் பண்ணினது மனவருத்தமாயிருக்குது" எண்டு நிலைமையை விளங்கப்படுத்தியிருக்கினம். அப்பதான் பிரதமசெயலாளருக்கு மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் தினம் எண்ட தகவலே தெரிஞ்சிருக்கு.

" எனக்கு அப்பிடி ஒரு துக்கதினம் எண்டு தெரிஞ்சா இப்பிடி ஏற்பாடு செய்திருக்க மாட்டன். நான் இது தொடர்பா மீட்டிங் வைக்கேக்க உங்கட தமிழ் அதிகாரிமார் கலந்து கொண்டவை. அந்த மீட்டிங்கில மே 18 முள்ளிவாய்க்கால் தினம் இருக்கெண்டு சொல்லியிருந்தால் கூட, வேற நாளுக்கு வைக்கச் சொல்லியிருப்பனே. நான் உங்கட உணர்வை மதிக்கிறன். உடனடியா அந்த வெசாக் நிகழ்வை கான்சல் பண்றன்" எண்டு சொல்லி, அந்த வெசாக் கொண்டாட்டத்தை நிப்பாட்டுற உத்தரவை அவைக்கு முன்னாலேயே போட்டிருக்கிறார். அவர் சொன்ன மாதிரி நேற்று மாகாண சபையில வெசாக் கொண்டாட்டம் ஒண்டும் நடக்கவேயில்லை.

அப்ப பிரதம செயலாளர் கூட எங்கட கருத்தை காது குடுத்துக் கேக்க தயாரா இருக்கிறார். ஆனால் எங்கட தமிழ் அதிகாரிமார்தான் நிலைமையை சரிவர அவருக்குச் சொல்லுகினம் இல்லை. பிரதமசெயலாளர் வெசாக் பற்றி கூட்டம் வைக்கேக்கையே முள்ளிவாய்க்கால் தினத்தைப் பற்றி சொல்லியிருந்தால், இப்பிடி ஒரு அவப்பெயர் பிரதம செயலாளருக்கு வந்திருக்காதே. முள்ளிவாய்க்கால் தினத்தில வெசாக் கொண்டாட்டம் நடக்கப் போகுதெண்டு பேப்பருகளில வந்த செய்தியைக் கூட, பிரதம செயலாளருக்கு தெரியாமல் அமுக்கிப் போட்டினமாம். அந்தப் பேப்பர் கட்டிங்கை, அவரைச் சந்திக்கப் போன ஆக்கள் காட்டின பிறகுதான் இவ்வளவு சீரியஸா விசயம் போட்டுதெண்டு பிரதம செயலாளருக்கு தெரிய வந்திருக்கு.

'ஒவ்வொரு பிரிவும் மூண்டு மூண்டு வெசாக் கூடும், அலங்கார வேலை செய்ய ஆக்களும் தரவேணும்' எண்டு சின்னப்பிள்ளையளுக்கு கைவினைப் பொருள் கொண்டு வரச் சொல்லுறமாதிரி கடிதமெல்லாம் அடிச்சு அனுப்பத் தெரிஞ்ச அதிகாரியளுக்கு, ஒருக்கா முள்ளிவாய்க்காலை பற்றி பிரதமசெயலாளருக்கு நினைவூட்ட துணிச்சல் வரேலையே. இல்லாட்டி முள்ளிவாய்க்காலை எங்கட அதிகாரியளும் மறந்திட்டினமோ தெரியேலை. மறதி எங்கட பிறவிக்குணமெல்லோ.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதியில் தோய்ந்த முள்ளிவாய்க்கால் கண்ணீரால் நனைந்தது




















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் துயரங்களில் தொடர்ந்தும் பாராமுகமாக உலக மனச்சாட்சி!

## குற்றஞ்சாட்டுகின்றது முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு

**முல்லைத்தீவு, மே 19**

**உலகின் மனச்சாட்சி எங்கள் துயரங்கள் தொடர்பில் இன்னம் பாராமுகமாக உள்ளது. எங்களுக்கு நடந்ததை இனப்படுகொலை என்றோ, அல்லது இன்றும் எங்களுக்கு நடந்து வருவதை இனவழிப்பு என்றோ பெயரிட உலகின் அதிகார சக்திகள் மறுத்து வருவதையும் இந்த நேரத்தில் நாங்கள் கவலையுடன் கவனித்தே நிற்கின்றோம் - இவ்வாறு குறிப்பிட்டுள்ளது முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு.**

அந்த அமைப்பால் நேற்று வெளியிடப்பட்ட முள்ளிவாய்க்கால் பிரகடனத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் துயர்மிகு நாள்களில் ஒன்றாகிய முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு நாளான மே 18ஆம் திகதியன்று மீண்டும் ஒரு தடவை நாம் கூடியுள்ளோம்.

இந்த நாள் எங்கள் தேசத்தின் மீது தொடர்ந்து வந்த, சிங்கள அரசுகள் நிகழ்த்தி வருகின்ற இனவழிப்பின் பாரதூரத் தன்மையையும், அச்சமூட்டும் அதன் பரிமாணத்தையும், அவற்றால் எங்களுக்கு ஏற்பட்ட தாங்கொணா இழப்புகளையும் நினைவு கூர்வதற்கான ஒரு நாள் மட்டுமல்ல, எத்தனை துயரங்கள் வந்தாலும் அழுத்தங்கள் தரப்பட்டாலும் நாங்கள் தோற்றுப்போகமாட்டோம்; முள்ளிவாய்க்கால் எமது எழுச்சியின் முடிவல்ல எனப் பிரகடனம் செய்கின்ற ஒரு நாளுமாகும்.

**சிங்கள - பௌத்த சித்தாந்தமே காரணம்**

சிங்கள மக்களின் மனவுலகு விசித்திரமானது. அது மகாவம்ச ஐதீகத்தின் அடிப்படையில் பௌத்த சிங்கள மேலாதிக்க மனப்பாங்காகப் பின்னப்பட்டுள்ளது. இத்தீவு முழுவதும் தமக்கென வாக்களிக்கப்பட்ட பூமி என்ற மகாவம்ச சொல்லாடலை உளமார நம்பும் சிங்கள தேசம், அதனையே தனது இயக்கு சக்தியாகக் கொண்டுள்ளது.

பௌத்த சிங்கள மேம்போக்கான மனப்பாங்கால் அவர்களிடையே உண்மையில் ஏற்பட்டுள்ள பயத்தைப் பேரினவாதமாக வளர்த்தெடுத்த சிங்கள அரசியல்வாதிகள், தமது தேர்தல் வெற்றிகளுக்கானதும், ஊழல்களுக்கானதுமான கவசமாக வெற்றிகரமாகப் பாவித்து வருகின்றார்கள்.

சிங்கள மக்களின் பேரினவாத அபிலாஷைகளைப் பூர்த்தி செய்பவர்களே தேர்தல்கள் மூலம் அரசியல் தலைமைப்பீடங்களுக்கு வரமுடியும் என்பதை சிங்கள மக்கள்தான் தமது வாக்களிக்கும் முறை மூலம் தமது அரசியல்வாதிகளுக்கு வெளிக்காட்டி வருகின்றனர்.

சிங்கள மக்களின் இந்த மனப்பாங்கு, ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்கள் மீதும் ஏனைய இனங்கள்மீதும் தொடர்ச்சியாக நிகழ்த்துகின்ற இனவழிப்பை மனிதாபிமானப் பிரச்சினையாகத்தன்னும் கருதமுடியாத மனஇறுக்கத்தை அவர்களிடையே ஏற்படுத்தியுள்ளது. சிங்கள மக்களின் இந்த மனப்பாங்கைப் பயன்படுத்துவதன் மூலம் தமது ஊழல்களையும், சுரண்டல்களையும் பெரும்பான்மை மக்களிடையே பேசுபொருளாகாமல் தவிர்க்க முடியும் என்ற பாடத்தையும் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும், பௌத்த மத நிறுவனங்களும் அறிந்து கொண்டுள்ளனர்.

**தமிழர் தாயகத்தின் கோரிக்கைகள்..**

இந்த நாளில் எங்களின் ஆத்மார்த்த கோரிக்கைகளை மீண்டும் ஒரு தடவை வலியுறுத்த விரும்புகின்றோம்.

1. நினைவுகூர்தலுக்கான உரிமையும் ஓர் அடிப்படை உரிமை. அது ஈழத்தமிழர்களின் பண்பாட்டு உரிமையும் கூட. ஈழத்தமிழர்களின் அந்த உரிமையை ஸ்ரீலங்கா அரசு ஒருபோதும் தடுக்கமுடியாது.

2. தமிழினப் படுகொலைக்கு சர்வதேச விசாரணையை மீள வலியுறுத்துகின்ற அதேநேரத்தில், வடக்கு-கிழக்கில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள சிங்கள-பௌத்தமயமாக்கப்படும் தமிழர் தாயகம் உட்பட்ட கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு செயற்பாடுகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்தவேண்டும்.

3. ஈழத்தமிழர்களின் பூர்வீக தாயகமாக வடக்கு - கிழக்கை அங்கீகரித்தல் வேண்டும்.

4. பௌத்தசிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைக்கான ஒரு பொறிமுறையே ஒற்றையாட்சி முறைமை என்பதை ஏற்றுக்கொண்டு, ஸ்ரீலங்காவின் ஒற்றையாட்சியை அகற்றித் தமிழ் இனத்தின்சுயநிர்ணயஉரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

5. தமிழர்கள் ஒரு தேசமாகத் தங்களை அடையாளப்படுத்தத் தேவையான அனைத்து இயல்புகளையும் பண்புகளையும் கொண்டவர்கள் என்பதையும், அதன் வழி அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமையும் ஒருபோதும் பராதீனப்படுத்தவியலாத இறைமையும் உள்ளது என்பதும் ஏற்கப்பட வேண்டும்.

மே 18 தனியே எமக்கான துயரத்தின் நினைவுகூரல் நாள் மட்டுமல்ல. இந்தத் தீவின் அரசால் மக்கள் ஆதரவுடன் ஓர் இனம் இனப்படுகொலை செய்யப்பட்டது. இன்றுவரை இனவழிப்புக்கு உள்ளாகின்றது என்பதை உலகுக்கும் குறிப்பாக இத்தீவின் சக தேசமான சிங்கள மக்களுக்கும் சொல்வதற்கான ஒரு நாளுமாகும்.

இந்த நாள் 'தமிழர்கள் நாம் வீழ்ந்துவிடவில்லை, வீழ்ந்தாலும் மறுபடியும் எழுவோம்' என்று வீழ்ந்துபட்ட எம் உறவுகளுக்கு வாக்குறுதி அளிக்கும் ஒரு நாளுமாகும். இந்த உலகில் யார் பாராதிருந்தாலும் யார் எதிர்த்தாலும் நாங்கள் நிமிர்ந்தெழுவோம், போராடுவோம், விழுதெறிவோம் - என்றுள்ளது. (ம)

# பேரினவாத அரசியலின் விளைவே இன்றைய பொருளாதாரச் சிதைவு!

## முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் பொதுக்கட்டமைப்பு சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, மே 19

70 ஆண்டுகால பேரினவாத அரசியலின் விளைவைத் தற்போது பொருளாதாரச் சீர்குலைவாக நாடு அனுபவிக்கின்றது. உண்மையை ஆராய்ந்தறிய வரலாறு தந்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தாமல் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு ராஜபக்ச ஆட்சியை மட்டும் காரணமாக்கி ஏனைய அரசாங்கங்களையும் எப்போதும் அழிவுகளின் பங்காளிகளாக இருக்கின்ற அதிகார வர்க்கத்தையும் விடுதலைசெய்யும் போக்கையே இன்று போராடுபவர்களிடையேயும் எம்மால் பார்க்கமுடிகின்றது- இவ்வாறு முள்ளிவாய்க்கால் பிரகடனத்தில் சுட்டிக்காட்டியுள்ளது முள்ளிவாய்க்கால் பொதுக்கட்டமைப்பு.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஊழலுக்கும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கும் பொறுப்புக்கூற அழைப்பு விடுக்கும் போராட்டக்காரர்களால் இன்றுவரை தமிழ்மக்கள் மீதான இனவழிப்புக்கு மட்டுமல்ல, இறுதிநேரத்தில் முள்ளிவாய்க்காலில் செய்யப்பட்ட இனவழிப்புக்காகத்தன்னும் பொறுப்புக்கூற வேண்டும் என இன்றுவரை கூறமுடியவில்லை.

இந்த மே 18இல், ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் தமிழ்மக்களின் தேசியத்தின் மீதான இனவழிப்பு நடவடிக்கைகளையும், ஒட்டுமொத்தமாக சிங்கள அரசு செய்த பெரும் படுகொலைகளையும், ஈற்றில் 2009ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்காலில் உச்சத்தை எட்டிய இனப்படுகொலையையும் நினைவுகூரும் நாம், சிங்கள மக்களுக்குக் கூற விழைவது ஒன்றை மட்டுமே! இன்றைய உங்களின் நிலைக்கு நீங்கள் வினா ஏதுமின்றி தொடர்ந்தும் ஒற்றையை மையப்படுத்திய பௌத்த சிங்கள பேரினவாத அபிலாஷைகளின் பாற்பட்டு சிங்கள அரசாங்கங்களுக்கு அளித்து வந்த ஆதரவின் விளைவையே இன்று நாடு அனுபவிக்கின்றது - என்றுள்ளது. (ம)



# திருச்செபமாலை பவனி

மன்னார்,மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, திருச்செபமாலை பவனி மன்னாரில் நேற்று இடம் பெற்றது.

மன்னார்த் தீவின் நுழைவாயிலில் அமைந்துள்ள மருதமடு அன்னை வீற்றிருக்கும் திருச்சொரூப வளாகத்தில் மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளாரால் திருச்செபமாலை பவனி ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து செபமாலை பவனி மன்னார் பேராலயம் நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. அங்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையால் மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் 13ஆவது நினைவேந்தலின் நற்கருணை வழிபாடு இடம்பெற்றது. (க-60)



# கிளிநொச்சியில் நினைவேந்தல்

கிளிநொச்சி,மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, கிளிநொச்சி சமத்துவக் கட்சி அலுவலகத்தில் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கரைச்சி [illegible] பொதுச்சுடரை ஏற்றினார். தொடர்ந்து [illegible] நினைவுப்படத்துக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். (க-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் / கொக்குவில் இ

## 2021 தரம் 5 புலமைப்பரிசில் பரீ




பாரா

கொக்குவி
புலமைப்ப


முன்னாள் அ
அதிபர் திரு
திரு.செ. ப
அனை
வெ



J.Lakshikan 189 | K.Buveersan 187 | A.Shasmitha 185 | A.Nithushana 183 | D.Ronaldo 182 | T.Mayooran 182 | S.Suvarnan 181 | N.Sarukesi 181 | M.Manshiga 181 | S.Pa



S.Sathana 174 | V.Nithushan 173 | J. Arujan 173 | R.Kajavarshanasarma 172 | Y.Thadsayini 172 | S.Nilaksayan 171 | R.Kavinia 171 | S.Atheeshan 169 | S.Kavinshan 169 | G.Nith



P. Pavirashan 165 | S.Thayanika 164 | P.Thanya 164 | S. Bavanuja 164 | J.Sabintha 164 | S.Danujan 162 | P.Tharmehan 162 | B.Lukshya 162 | D.Nithursha 162 | K.Aj



A.Pranathy Ingharan 160 | J. Thanushanth 159 | K. Abisna 159 | N. Nithilan 158 | P. Santhosh 158 | K.Prakashvini 158 | S.Tharvin 157 | R.Pirunthavan 157 | K.Sarunja 157 | P.Tha



S.Aaruthi 155 | J.Rakavee 155 | S.Hemajani 154 | L.Lathursika 154 | P.Swethikka 153 | J.Abishna 153 | N. Karunya 153 | S.Anushmika 153 | K.Kesigan 152 | S. T



A.Varshika 151 | N.Oviyaa 151 | K.Sarankini 151 | T.Ketharani 151 | S.Kajanan 150 | S.Vaksanja 150 | K. Shathursika 150 | R. Shayana 150 | S. Kamshajin 150

Congratulations

Congratulations பாராட்டி வாழ்த்துபவர்கள் : தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மாற்றம் நிரந்தரமாகட்டும்...

முள்ளிவாய்க்கால்மனிதப் பேரவலத்துக்குள்குருதிச்சகதிக்குள் தமிழர் தாயகம் குளித்தெழுந்ததன் 13ஆவது நினைவேந்தல் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டிருக்கின்றது. துடிதுடித்துஅவலச் சாவடைந்த ஆன்மாக்களை நினைவேந்தும் வகையில் பல்சமய வழிபாடுகளுக்கு மத்தியில் பல்லாயிரக் கணக்கான கண்களில் இருந்து கண்ணீர் பெருக்கெடுக்க இதயங்கள் கனக்க - மனம் வெடித்துத் ததும்ப - வழக்கம்போன்று உணர்வெழுச்சியுடன் அமைந்திருக்கின்றது இந்த நினைவேந்தல்.

மே18 என்றாலே தமிழர் தாயகம் தன்னை மறந்த சோகத்தில் ஆழ்வதும், இவ்வாறான உணர்வுப் பிரவாகம் எம்மை முற்றுமுழுதுமாக ஆட்கொள்வதும் வழக்கமானதுதான். ஆனால், இதுவரை காலமும் தமிழர் தாயகத்தில் முள்ளிவாய்க்காலிலும் இன்னும் முக்கியத்துவம் மிக்க இடங்களிலும் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு மத்தியில் கடைப்பிடிக்கப்படும் இந்த நினைவேந்தல் வரலாற்றில் முதல் முறையாக தமிழர் தாயகத்துக்கு அப்பால் இலங்கையின் தலைநகரில் எதிரொலித்திருக்கின்றது.

பல்லாயிரக் கணக்கில் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்ட தினத்தை போர்வெற்றி விழாவாக 2009இல் கொண்டாடித்தீர்த்த அதே காலிமுகத்திடல் நேற்று முதல் முறையாக முள்ளிவாய்க்கால் பேரவலத்தை அஞ்சலித்திருக்கின்றது. இதில் குறிப்பிட்டுக்கூற வேண்டிய விடயம் என்னவென்றால் பல பிக்குகளின் முன்னிலையில் அவர்களின் ஆதரவோடு நூற்றுக்கணக்கான சிங்கள மக்களின் பங்குபற்றுதலோடு நேற்று நிகழ்ந்து முடிந்திருக்கின்றது இந்த அஞ்சலி.

மே 18 என்பது கொண்டாட்டத்துக்கு உரிய நாளல்ல. அன்று நடந்தவை பாற்சோறு பொங்கி, பட்டாசு கொளுத்திக் கொண்டாட ஏதுவான சம்பவங்களுமல்ல. அதுவொரு துக்கிப்பின் நாள். உயிர்ப்பிழைப்பை நோக்கிய பறவையாக ஒரு மக்கள்கூட்டமே அன்று அங்கலாய்த்துத் திரிந்தது. அந்த மக்கள் கூட்டத்துக்கு 'இலங்கையர்' என்றும் பெயர். இறப்பு வீட்டில் ஏது கொண்டாட்டம்? அங்கு நடக்கவேண்டியவை அஞ்சலிகளே அங்கு மிச்சமிருக்க வேண்டியது கண்ணீரே என்ற குறைந்த பட்சப் புரிதலின் ஆரம்பத்தை காலிமுகத்திடல் நேற்றுக் கண்டடைந்திருப்பது கொஞ்சம் ஆறுதல்.

சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு எதிரான மாற்றம் என்பது இதுதான். ஆட்சியாளர்களை வீட்டுக்குச் செல்லுமாறு வலியுறுத்தும் போராட்டங்களை விடவும் இத்தகைய மாற்றங்களைத்தான் தமிழ் மக்கள் சிங்கள உறவுகளிடம் இருந்து எதிர்பார்க்கின்றனர். இந்த நாட்டில் சிறுபான்மை மக்களின் இருப்பென்பது அவர்களின் அரசியல் நகர்வை விடவும் சிறுபான்மை மக்களுக்கான சர்வதேச ஆதரவுத் தளத்தை விடவும் பெரும்பான்மை மக்களின் மனங்களில் ஏற்படும் மாற்றத்தில்தான் தங்கியிருக்கின்றது. காரணம், அந்த மாற்றம்தான் நீடித்த - நிலையான - அமைதிக்கும் அபிவிருத்திக்கும் பாதைகளை அகலத்திறந்து விடக்கூடியது.

இனவாதமும் மதவாதமும் அற்ற ஒரு சமூகம்தான் பண்பாட்டிலும், பொருளாதாரத்திலும், அபிவிருத்தியிலும், அரசியலிலும் உயர்ந்தோங்கும். அத்தகைய பல்லினப் பண்பாடுடைய சமூகத்தைக் கட்டியெழுப்புவதுதான் இளைஞர்களின் இன்றைய் காலக்கடமை. பெர்லின் சுவரை ஜேர்மனியர்கள் தகர்த்தெறிந்தது போல் நமக்குள் இருக்கும் துவேசங்களை நாமும் தகர்த்தெறிந்தால்தான் எதிர்காலமென்ற ஒன்று இருக்கும். ஆதலால், இந்த மாற்றம் நிரந்தரமாகட்டும்.

**நாளொரு நல்வார்த்தை**

"நீ போகும் பாதையில் தடைகள் எதுவும் இல்லை என்றால் அது நீ போகும் பாதையே இல்லை. வேறு யாரோ போன பாதை" - **பிடல் காஸ்ட்ரோ**




# நீர்த்தேக்கங்கள் நிறைவதால் மின்தடை நேரம் குறையலாம்

**கொழும்பு,மே 19**

**மழையுடனான காலநிலை நீடிப்பதால், நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்டியுள்ள நீர்த்தேக்கங்களில், நீர்மட்டம் குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்துள்ளது.**

அதனால் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மின்தடை நேரத்தை எதிர்காலத்தில் குறைக்கமுடியும் என்று மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது. நீர்மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம், தற்போது 50 வீதமளவில் உயர்வடைந்துள்ளது. நீர்மின் உற்பத்தி மூலம் கடந்த வாரம் 210 ஜிகாவாட்ஸ் மின்சாரம் கிடைக்கப்பெற்றது. நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் மேலும் அதிகரித்தால், மின்னுற்பத்தியை மேலும் அதிகரிக்க முடியும். அதே வேளை புதுப்பிக்கப்பட்ட சக்தியை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்து சுமார் 3 மாதங்கள் கடந்துள்ள நிலையில், அந்தப் பணிகள் தொடர்பில் திருப்தியடைய முடியாதுள்ளது என்று மின்சார சபையின் சிரேஷ்ட பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் நந்திக பத்திரண தெரிவித்துள்ளார். (க-இ)

# எரிபொருள்களின் விலை அதிகரிக்காது

கொழும்பு,மே 19

எரிபொருள்கள் விலை அதிகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் தற்போது இல்லை என்று லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது. இலங்கையில் மீண்டும் எரிபொருள்களின் விலையை அதிகரிக்க லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தீர்மானித்துள்ளது என்று சமூக வலைத்தளங்களில் தகவல்கள் வெளியிடப்பட்டிருந்தன. இதனை அந்த நிறுவனம் மறுத்துள்ளது. (க-இ)





# கோதுமை மா விலை மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு,மே 19

இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலை நேற்று முன்தினம் முதல் 35 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பேக்கரி உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். பேக்கரி உற்பத்திகளின் விலை மேலும் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (க-இ)

**நாளை** 20.05.2022 வெள்ளிக்கிழமை வைகாசி 06

சுபநேரம் : 05.52 - 07.22
ராகுகாலம்: 10.22 - 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்படுகொலைக்குக் காரணமான அனைவரையும் தூக்கிலிட வேண்டும்

## கஜேந்திரன் வலியுறுத்து

கொழும்பு,மே 19

இனப்படுகொலைக்குக் காரண மானவர்கள் அனைவரையும், சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்தி, அவர்களைத் தூக்கி லிடவேண்டும். அதற்காக நாம் தொடர்ந்து குரல் கொடுப்போம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் நாடாளுமன்ற உறுப் பினர் செல்வராசா கஜேந்திரன் நாடாளுமன்றில் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இன அழிப்புப் போரின்போது, மக் கள் பாதுகாப்பு வலயங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. இசைப் பிரியா போன்றவர்கள் வன் கொடுமையின் பின் படுகொலை செய்யப்பட்டனர். பாலச்சந்திரன் போன்ற சிறார்கள் சித்திரவதைக் குட்படுத்தப்பட்டு கொலைசெய்யப் பட்டனர்.

உணவுத் தட்டுப்பாடு மற்றும் மருந்துத் தட்டுப்பாடு என்பன இன அழிப்புப் போரில் தமிழர்களுக்கு எதிரான ஆயுதங்களாகப் பயன்ப டுத்தப்பட்டன.

தமிழர்களிடமிருந்து தலைவர்க ளைத் தேடுங்கள், மாறாக முகவர் களைத் தேட வேண்டாம். எங்களது தேசத்தை அங்கீகரிக்கும் வகை யில் சமஷ்டித் தீர்வை முன்வைக் கவும் - என்றார். (க-22)



## மன்னாரிலும் நினைவேந்தல்

மன்னார்,மே 19

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மன்னார் பஜார் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப் பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ் வில், அருட்தந்தையர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங் கப்பட்டது. (க-56)



## வலி.கிழக்குப் பிரதேசசபையில் முள்ளிவாய்க்கால் அஞ்சலி

யாழ்ப்பாணம்,மே 19

முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தல் நாளில், வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையில் ஈகச் சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தலைமையில் ஒன்று கூடிய பிரதேச சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் அஞ்சலி செலுத்தினர். (க)



## நெய்தீபம் ஏற்றிநினைவேந்தல்

வவுனியா,மே 19

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த உறவுகளுக்கு ஆத்மசாந்தி வேண்டி, நெய்தீபம் ஏற்றி நேற்று வழிபாடு மேற்கொள்ளப்பட்டது.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில், வவுனியா குருமன்காடு ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் இந்த வழிபாடு இடம்பெற்றது.

ஒன்றியத்தில் தலைவர் முத்து ஜெயந்திநாதக்குருக்கள் முதலாவது சுடரை ஏற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். அதனைத்தொடர்ந்து ஏனையவர்களும் சுடரை ஏற்றினர். (க-110)

## நந்திக்கடலில் அஞ்சலி வற்றாப்பளையில் வழிபாடு

முல்லைத்தீவு,மே 19

முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த உறவுகளுக்கு, வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரை ராசா ரவிகரன், நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்திய பின்னர், வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்திலும் நேற்று வழிபாடுகளை மேற்கொண்டார்.

போரின் இறுதிச்சாட்சியான நந்திக்கடலன் னையை வணங்கி, உயிர்நீத்த உறவுகளுக்கு மலர்தூவி அஞ்சலி செலுத்தினார். அத்துடன் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட உறவுகளின் ஆத்மசாந்தி வேண்டி, வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொண் டார். கரைதுறைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரனும் உறவுகளுக்கு அஞ் சலி செலுத்தினார். (க-246)



## நினைவேந்தலும் ஆர்ப்பாட்டமும்

வவுனியா,மே 19

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கத்தினரால், முள்ளிவாய்க்கால் நினைவேந் தலும், உறவுகளுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டமும் வவுனியாவில் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியா ஏ-9 வீதியில் ஆயிரத்து 915வது நாளாக சுழற்சி முறைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவேந்தலை முன்னிட்டு, உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தியதுடன், நீதி கோரி போராட்டத்தி லும் ஈடுபட்டனர். (க-110)




## வழிபாட்டுடன் கஞ்சி பகிர்வு

மூதூர்,மே 19

முள்ளிவாய்க்கால் நினைவுதினத்தை முன்னிட்டு மூதூர் சிறி நாராயணபுரம் கிறிஸ்த தேவாலய வளா கத்தில் தீபம் ஏற்றி வழிபாடு மேற்கொள்ளப்பட்டது டன், கலந்து கொண்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சியும் பகிர்ந்தளிக்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்டோர் உயிர் நீத்தவர்களுக்காக தீபம் ஏற்றி ஆத்மா சாந்தி வேண்டி அஞ்சலி செலுத்தினர். நிகழ் வில் கலந்து கொண்டோருக்கு பயன்தரும் தென்னங் கன்றுகளும் வழங்கப்பட்டன. (க-40)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, முல்லைத்தீவு மாவட்டத்தில் வர்த்தகர்கள் கடை களை மூடி, துக்கதினம் அனுஷ்டித்தனர். (க)

படம் - தவசீலன்



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் களின் ஏற்பாட்டில், கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு, கஸ்தூரியார் வீதி சுற்றுவட்ட சந்தியில் நேற்று முன்தினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. நினைவுப்பதாகையும் காட் சிப்படுத்தப்பட்டிருந்தது. (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்கள் நிலையான வைப்புக்கு 17.5%(வ.வ.)
(வ.உ.வ. 18.67%)
கவர்ச்சிகரமான வட்டி!

நாளைய தினத்துக்கு இன்றே முதலீடு செய்ய இலங்கை வங்கி அறிமுகப்படுத்தும் 100 நாட்களில் முதிர்வடையும் நிலையான வைப்பு.

- குறைந்தபட்ச நிலையான வைப்புத் தொகை 2.5 மில்லியன் ரூபாய்
- வைப்புத் தொகையின் அடிப்படையில் 90% வரையான உடனடிக் கடன் வசதி
- அரச வங்கியின் நம்பிக்கையும் பாதுகாப்பும்

மேலதிக விபரங்களை அருகிலுள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது 1975 அழைப்பு மையத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

BOC 100 Day INVESTMENT

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# ராஜீவ்காந்தி கொலை வழக்கு:
# பேரறிவாளன் விடுதலை!

புதுடில்லி, மே 19

**இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துவந்த பேரறிவாளன் நேற்று விடுவிக்கப்பட்டார்.**



1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் திகதி அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட் டில் பேரறிவாளன், சாந்தன், முருகன், நளினி உள்ளிட்ட ஏழு பேர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டில் அவர்களின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அவர்கள் ஏழு பேரையும் விடுவிக்கவேண்டும் என்று தமிழக அரசும் சட்டப் போராட்டம் நடத்தி வந்தது.

2014ஆம் ஆண்டு இவர்கள் அனைவரையும் விடுவிக்கப்போவதாக ஜெயலலிதா அரசு அறிவித்தது. இதற்கு மத்திய அரசின் முடிவையும் (ஒப்புதலையும்) கோரியிருந்தது.

ஆயினும் இந்திய மத்திய அரசு, இது இந்திய மத்திய புலனாய்வுத்துறை சார்ந்த வழக்கு என்பதால் தாம்தான் இதில் முடிவெடுக்கவேண்டும் என்று அறிவித்து 'ஜெ' அரசின் நடவடிக்கைக்குத் தடைபோட்டனர்.

இதையடுத்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று பேரறிவாளன் 2016ஆம் ஆண்டு மேன்முறையீடு செய்தார்.

இந்த விடயத்தில் ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டு திகதி குறிப்பிடாமல் வழக்கை ஒத்திவைத்தது.

ஆனால், ஆளுநர் தொடர்ந்து மௌனம் காத்துவந்ததால் நீதிமன்றம் தனது தற்துணிவான அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுவித்தது. (ம)

## நீதிமன்றத்தின் தற்துணிவால் பேரறிவாளனுக்கு விடுதலை!

புதுடில்லி, மே 19

இந்திய மத்திய அரசின் கருத்துக்களுக்காக மேலும் காத்திருக்காமல் தனது தற்துணிவின் அடிப்படையிலேயே பேரறிவாளனை விடுவித்தது உச்சநீதிமன்றம்.

பேரறிவாளன் தொடர்ந்த வழக்கில், அவரின் விடுதலை தொடர்பில் ஆளுநர் முடிவெடுக்க வேண்டும் என்று தெரிவித்து திகதி குறிப்பிடாமல் வழக்கை ஒத்திவைத்த நீதிமன்றம், நேற்று தீர்ப்புக்காக வழக்கைப் பரிசீலனைக்கு எடுத்து, முழுக்கமுழுக்கத் தனது தற்துணிவின் அடிப்படையிலேயே அவரை விடுவித்தது.

"ஆளுநரின் அதிகாரத்துக்கு உட்பட்டு அவர் இறுதிமுடிவு எடுக்க வேண்டும்" என்று அறிவித்திருந்தபோதிலும் இது தொடர்பில் ஆளுநர் தொடர்ந்து மௌனம் காத்துவருகின்றார், அவர் அவ்வாறு செயற்பட முடியாது.

ஆளுநருக்கோ இந்திய மத்திய அரசுக்கோ இந்த விடயத்தில் தொடர்ந்து கருத்துக்கூற ஏதுமில்லை என்றால் பேரறிவாளன் விடுவிக்கப்படுகின்றார்.

உச்சநீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரங்களைப் பயன்படுத்தி அவர் விடுவிக்கப்படுகின்றார் என்று வழக்கை விசாரித்த நீதிபதிகள் கூட்டாக அறிவித்தனர். (ம)

## அழுது தீர்த்த அற்புதம்மாள்!

புதுடில்லி, மே 19



பேரறிவாளன் விடுவிக்கப்பட்டதையடுத்து அவரது தாயாரான அற்புதம்மாள் மகிழ்ச்சிப் பிரவாகத்தில் அழுதுதீர்த்தார்.

பேரறிவாளனின் விடுதலை தொடர்பான செய்திகள் தமிழகத்தில் பல தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் நேற்று நேரலையாக ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தன. அந்தச் செய்திகளைப் பார்த்து மகிழ்ச்சிப் பிரவாகத்தில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார் அற்புதம்மாள்.

பேரறிவாளன் விடுவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி அற்புதம்மாள் கடந்த 30 ஆண்களாக பல சட்டப்போராட்டங்களை நடத்திவந்தார். பல இடங்களிலும் மனுக்களைக் கையளித்தும் பல போராட்டங்களை முன்னின்று நடத்தியும் அவர் ஓயாதிருந்தார். பேரறிவாளனின் விடுதலை அற்புதம்மாளுக்குக் கிடைத்த வெற்றியாகவும் பார்க்கப்படுகின்றது. (ம)

## கொண்டாடியது தமிழகம்

புதுடில்லி, மே 19

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இருந்து பேரறிவாளன் விடுவிக்கப்பட்டதை அடுத்து, தமிழகத்தில் பல இடங்களிலும் பட்டாசு கொளுத்திக் கொண்டாடப்பட்டது. ராஜீவ் கொலை வழக்கில் சிறையிலுள்ளவர்கள் அப்பாவிகள். அவர்கள் விடுவிக்கப்படவேண்டும் என்று தமிழகத்தில் கட்சிபேதங்களைக் கைவிட்டு ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் கடந்த காலங்களில் நடத்தப்பட்டுள்ளன. இந்தநிலையில் பேரறிவாளன் விடுதலை செய்யப்பட்டதை அடுத்து, தமிழகத்தில் பல இடங்களில் பட்டாசு கொளுத்திக் கொண்டாடப்பட்டது. பேரறிவாளனின் உறவினர்கள் இனிப்புக்களைப் பரிமாறித் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். (ம)

## தமிழகக் கட்சிகள் தீர்ப்புக்கு வரவேற்பு

சென்னை, மே 19

பேரறிவாளனின் விடுதலைக்கு தமிழகத்தின் ஆளும் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகம், பிரதான எதிர்க்கட்சியான அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சி இதர கட்சிகள் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

இந்தச் சட்டப்போராட்டத்தில் தமிழகத்தின் அனைத்துக் கட்சிகளும் கைதான ஏழு பேரும் விடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தி ஓரணியில் நின்றன.

இந்தநிலையில் உச்சநீதிமன்றத்தில் நேற்றைய தீர்ப்புக்கு அனைத்துக் கட்சிகளும் வரவேற்புத் தெரிவித்துள்ளன.

சிறையிலுள்ள ஏனையவர்களும் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கிக் கடனில் கட்டிய வீடு வன்முறையில் எரிந்ததாம்!

## நாடாளுமன்றில் பொருமிய எம்.பிக்கள்

**கொழும்பு, மே 19**

**மே மாதம் 9 ஆம் திகதி பொதுஜன பெரமுன ஆதரவாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறையைத் தொடர்ந்து, அரசியல் பிரமுகர்களின் வீடுகள் மக்களால் எரிக்கப்பட்டன. இதனால் பலர் வீடுகளை இழந்து, அழிந்த சொத்துக்களை மீளப்பெற முடியாதுள்ளனர். இது தொடர்பில் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தமது முறைப்பாடுகளை முன்வைத்தனர்.**

வங்கிக் கடன்களைப் பெற்று கட்டிய வீட்டை, மீளத்திருத்த முடியாத நிலையில் உள்ளேன். எனது இரண்டு பிள்ளைகளும் பல்கலைக்கழக புத்தகங்கள் உட்பட பெறுமதியான பொருள்களை தீ மற்றும் அழிவில் இழந்துள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.

வீடுகள் தாக்கப்பட்டு தீவைக்கப்படும்போது பொலிஸார் எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்குத் தீ வைப்பதன் மூலம் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமா? என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ கேள்வி எழுப்பினார்.

மக்களின் போராட்டத்தைக் குற்றமற்றது என விளக்க முடியாது. காலிமுகத்திடலில் உள்ள குழுவினர் நாட்டைச் சீர்குலைக்க முயற்சிப்பதுடன், ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டு, ஜனாதிபதியின் கடமைக்கு இடையூறு விளைவிக்கின்றனர். இந்தப் போராட்டம் வெளிநாட்டுப் பின்னணியில் நடைபெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிந்தக மாயாதுன்ன தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரள தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளத் தப்பியோடியபோது, கொடூரமான முறையில் தாக்கப்பட்டார். நான் அரசியலில் தொடர்ந்து நீடிப்பேனா என்பது எனக்குத் தெரியாது.

எனது இல்லத்தின் மீது தாக்குதல் நடத்திய நபர்களை வெறுக்கப்போவதில்லை. கருணையுடன் செயற்படுவேன் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மாயாதுன்ன தெரிவித்தார். (க-இ)

# மே 9 வன்முறை

## சால்வை அணிந்த காகத்தின் சதியே

### கூறுகிறார் விமல்

கொழும்பு, மே 19

சால்வை அணிந்த காகமே அரசாங்கத்துக்குள் பிளவுகளை ஏற்படுத்தத் திட்டமிட்டது. அந்தக் காகம்தான் காலிமுகத்திடலுக்கு மக்களைக் கொண்டு வரத்திட்டமிட்டது. காகத்தின் முட்டாள்தனமான சகாக்களும் அதற்குள் சிக்கினர். இதனாலேயே பெரும் வன்முறை வெடித்தது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

அலரிமாளிகையில் திரண்டிருந்த மக்களைக் காலிமுகத்திடலுக்குள் அனுமதிக்கக் கூடாது என்று ஜனாதிபதி விடுத்த உத்தரவை நிறைவேற்றுவதற்கு அமைச்சின் செயலாளர், மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு இடமளிக்கவில்லை. இரண்டு சகோதரர்களுக்குமிடையிலான பிரச்சினை, இதில் தேவையற்ற சிக்கலைச் சந்திக்க வேண்டாம் என்று அமைச்சின் செயலாளர், மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் வழங்கிய அறிக்கையின் மூலம் இது உறுதிப்படுத்தப்பட்டது. காலிமுகத்திடலுக்கு வருபவர்களில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் சகாக்கள் உள்ளனர். அந்த நபர்களைத் தாக்கினால் நீங்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியேற்படும். அவர்கள் இருவரும் இறுதியில் நன்றாக இருப்பார்கள், நீங்கள் சிக்கலில் இருப்பீர்கள். எனவே நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும் என்று அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். மக்களை அலரி மாளிகைக்கு அழைத்து வந்த முட்டாள்தனமான செயற்பாட்டுக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கிறோம். இரண்டு வாரங்களின்முன் நாமல் ராஜபக்சவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நாட்டை அழிவுப்பாதைக்குக் கொண்டு செல்லும் திட்டமுள்ளது, அதில் தொடர்புபட வேண்டாமெனக் கூறினேன். இன்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது -என்றார். (க-இ)

# சாணக்கியனுக்கு கிடைத்த வாய்ப்பை தடுத்து நிறுத்திய தினேஷ் குணவர்த்தன

கொழும்பு, 19

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனை சபைக்கு தலைமைதாங்குமாறு சபாநாயகர் அழைத்த போது, அதனை சபை முதல்வரான அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தடுத்துள்ளார் என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

நாடாளுமன்றில், தமிழ் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான இரா.சாணக்கியன் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். நாடாளுமன்ற அமர்வுக்கு தலைமை தாங்கிய சபாநாயகர், ஒத்திவைப்பு விவாதம் ஒன்றின்போது, தனக்கு அடுத்ததாக என்னைச் சபைக்கு தலைமை தாங்குமாறு படைக்கல சேவிதரிடன் கூறியுள்ளார்.

அவர் என்னிடம் கூறியதற்கமைய நான் தயாரானேன். சபை முதல்வரான அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, சபாநாயகருக்குத் துண்டுச் சீட்டில் அனுப்பிய சில தகவல்களின் அடிப்படையில் எனக்குப் பதிலாக நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார சபைக்கு தலைமை தாங்க அழைக்கப்பட்டார். இது நாடளுமன்ற உறுப்பினரான எனது சிறப்புரிமையை மீறும் செயல். எனக்கு சபாபீட ஆசனம் பெரிதல்ல -என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, சாணக்கியன் அடிக்கடி இவ்வாறான பிரச்சினைகளை எழுப்பி வருகின்றார். எனவே இந்த விடயத்துக்கு நான் பதிலளிக்கப்போவதில்லை சபாநாயகரே பதிலளிக்கவேண்டும் -என்றார்.

இதனையடுத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சாணக்கியனுக்கு ஆதரவாக குரல் எழுப்பினார். அதனால் சுமந்திரன், சாணக்கியன் ஆகியோருக்கும் தினேஷ் குணவர்த்தனவுக்குமிடையில் கடும் தர்க்கம் தொடர்ந்தது.

சபைக்குத் தலைமை தாங்கிய சாந்த பண்டார அவர்களைக் கட்டுப்படுத்த பலமுறை முயன்றும் முடியவில்லை. சபை அமளிதுமளிப்பட்டது. (க-22)



# கொழும்பில் இரு வீதிகள் ஆர்ப்பாட்டத்தால் தடை

கொழும்பில் எரிபொருள் கோரி பொதுமக்கள் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தால் இரு வீதிகள் முடங்கின. பொரளை- மருதானை ஆனந்தா கல்லூரி வீதி, கொழும்பு- நீர்கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்க வீதிகளிலே போக்குவரத்து தடைப்பட்டது. இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-இ)

## சீரற்ற வானிலையால்


# எரிவாயு தரையிறக்கம் தாமதம் வரிசைகளில் நிற்காதீர்கள்

கொழும்பு, மே 19

சீரற்ற வானிலை நிலவுவதால் எரிவாயு தரையிறக்கும் பணிகள் தாமதமடைந்துள்ளன. இதனால் மக்கள் மறுஅறிவிப்பு வரை எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருக்க வேண்டாம் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

நாளாந்தம் 80 ஆயிரம் சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது எனவும் அதற்கென 7 மில்லியன் டொலர் செலுத்தப்பட்டுள்ளது எனவும் லிட்ரோ நிறுவனத் தலைவர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, 3ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயு தாங்கிய மற்றுமொரு கப்பல் இன்றைய தினம் நாட்டை வந்தடைய உள்ளது. குறித்த இரண்டு கப்பல்களின்மூலம் பெற்றுக்கொள்ளப்படும் எரிவாயு, 5 நாள்களுக்குப் போதுமானதாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.



இந்த நிலையில் சமையல் எரிவாயு விநியோகப் பணிகளை நேற்று ஆரம்பிப்பதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்திருந்த நிலையில் தற்போதைய சீரற்றவானிலையால் எரிவாயு தரையிறக்கும் பணிகள் தாமதமடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்து ஆரம்ப பாடசாலை
# ட்சையில் தோற்றிய மாணவர்களை
# ாட்டி வாழ்த்துகின்றோம்



T. KAJALUXSAN
198
தேசிய ரீதியில்
முதலிடம் பெற்ற
மாணவன்

**ல் இந்து ஆரம்ப பாடசாலையின் தரம் 5 2021 ஆம் ஆண்டு**
**பரிசில் பரீட்சையில்** தோற்றிய மாணவச் செல்வங்களை பாராட்டி
வாழ்த்துவதோடு அவர்களை வழிப்படுத்திய பாடசாலை
**அதிபர் திரு. பேரம்பலம் தனபாலசிங்கம் மற்றும் தற்போதய**
**நமதி நவஜீவா கவிஞ்ஞா மற்றும் முன்னாள் உப அதிபர்கள்**
**மகிந்தன், திரு.செ.ஜெயகாந்தன், ஆசிரியப் பெருந்தகைகள்**
வரையும் மனம் நிறைந்த நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதில்
பெற்றோர்களாகிய நாங்கள் பெருமிதம் அடைகின்றோம்.



rmilan 180 | K.Kavinja 180 | G.Kajatheyshan 179 | C.Rithish 179 | J.Mathusanan 177 | K.Pavithra 177 | S.Athvajan 176 | N.Santhosh 176 | J.Jarun 175 | T.Kavishan 175




hurnan 169 | S. Subasri 169 | K.Kamsika 169 | N.Kulalini 169 | M.Thujaan 168 | K.Kapinaya 167 | K.Sathvikan 166 | A.Jathusha 166 | S.Sarmisda 166 | M.Jeramith 165



jeesan 161 | R.Bavalayan 161 | E. Abisan 161 | T.Thanyasri 161 | M.Sathurthigan 160 | Y.Piranavan 160 | D.Nivedran 160 | G.Subraja 160 | S.Harshana 160 | K. Aswatha 160



apshiha 157 | S. Akshiga 157 | J.Akshshajini 157 | S.Layahari 157 | S.Abishayan 156 | T.Abishan 156 | K.Thagsha 156 | R.Atheep 155 | J.Thanshigaa 155 | S.Thivyasrii 155



Thivish 152 | J.Mathushanth 152 | U.Thakshagi 152 | S.Saraniya 152 | M.Mathusi 152 | S. Navviya 152 | S.Saanujan 151 | K.Pirasanna 151 | J.Sivasangar 151 | K.Varnaja 151



ni | K.Abisha 150 | G.Abishayan 149 | V. Sainthavi 149 | S. Theamathuran 148 | U.Sankeeth 148 | G. Arjith 148 | K. Tishana 148 | V.Kabishana 148 | K. Rapiska 148

**5 மாணவர்களின் பெற்றோர்கள்**

Congratulations

(C 866) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்று மாலையும் கொழும்பில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்



கொழும்பு, மே 19

முள்ளிவாய்க்கால் படுகொலையின் 13ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் காலை காலிமுகத் திடலில் நடத்தப்பட்ட நிலையில், நேற்று மாலையும் நினைவேந்தல் நடத்தப்பட்டது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவைப் பதவி விலகக் கோரி அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவரும் 'கோத்தா கோ கம'வில் நேற்றுக் காலை நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. நேற்று மாலை, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உரிமையை வலியுறுத்தும் வகையில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. கோல்பேஸ் ஹொட்டல் முன்பாக இந்த நினைவேந்தல் நடத்தப்பட்டது. இதில் கலந்துகொண்டவர்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பதாகையுடன் இறந்தவர்களுக்கு நீதி கோரி பேரணியை ஆரம்பித்தனர். இந்தப் பேரணி காலிமுகத் திடல் போராட்டத்தின் மத்திய இடமான ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக நிறைவுபெற்றது. (எ-22)

# வன்முறைக்கு பின்னணி ஜே.வி.பி. குற்றச்சாட்டுகளுக்கு அநுர பதிலடி



கொழும்பு, மே 19

கடந்த 9 ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் வீடுகளுக்கு சேதம் ஏற்படுத்தியமைக்கு பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணியின் தலையீடு இருக்கின்றது என்றுபுத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ குற்றம்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். 88 மற்றும் 89ஆம் ஆண்டுகளில் நடந்த சம்பவங்களையும் அவர் குறிப்பிட்டுக் காட்டினார்.

அவருக்குப் பதிலளித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, 88 மற்றும் 89ஆம் ஆண்டுகளில் நிகழ்வுகளின் பின்னர் தமது கட்சியின் அரசியல் செயற்பாடுகள் மிகவும் ஜனநாயக ரீதியிலான திருப்பத்தைக் கொண்டிருக்கின்றன. 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தை மக்கள் விடுதலை முன்னணியின் கணக்கில் வரவு வைக்கப் பலர் முயற்சிக்கின்றனர். ஜே.வி.பி. பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனால் நாங்கள் ஒரு கல்லைக்கூட எடுக்க முயற்சிக்கவில்லை. கடந்த 9ஆம் திகதி அலரிமாளிகைக்கு அழைத்து வரப்பட்டவர்களில் மஹியங்கனை மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள மனநலம் பாதிக்கப்பட்ட யாசகர் ஒருவரும் அடங்குகின்றார். மிகவும் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் மீது மதுபோதையில் வந்து வாள்கள் மற்றும் பொல்லுகளைக் கொண்டு வந்து தாக்குவது மிகவும் கேவலமானது என்று தெரிவித்தார்.

மீண்டும் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அருந்திக பெர்னாண்டோ, பொலிஸ்மா அதிபரின் தகவலின்படி, கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் ஜே.வி.பி. உறுப்பினர்கள் 150 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

அதற்குப் பதிலளித்த அநுரகுமார திஸாநாயக்க, அவ்வாறான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டால், உடனடியாக சுயாதீன விசாரணையை கோரவேண்டும். எந்த நேரத்திலும் அச்சமின்றி அவ்வாறான விசாரணையை எதிர்கொள்ள நானும், எனது கட்சியும் தயாராகவே இருக்கின்றோம் என்று கூறினார்.



அநுரகுமார திஸாநாயக்கவின் உரையின் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரண உரையாற்றும்போது, அலரிமாளிகை முன்பாக இருந்த மக்களை கோபத்துக்கு ஆளாக்கும் செயற்பாட்டை அறிவற்றதொரு அரசியல்வாதிகள் குழுவொன்றே மேற்கொண்டது என்பதை ஒப்புக்கொள்கின்றேன். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சிரேஷ்ட பிரதிப் பொலஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்த கருத்துதான் இந்த சம்பவத்தின் யதார்த்தம் என்று தெரிவித்தார்.

நிலைமையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஈடுபட்டிருந்த போதிலும், இதில் நேரடியாகத் தலையிட வேண்டாம் என பொலிஸ்மா அதிபரும், பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் அவருக்கு பணிப்புரை விடுத்திருந்தனர் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்பவத்துக்கு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் நேரடியாகப் பொறுப்புக்கூற வேண்டும்- என்றார். (எ-இ)


## வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
## கேள்வி அறிவித்தல் - 2022
## குளுமாட்டுச்சந்தி கடைத்தொகுதி - 2022

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை எல்லைக்குள் அமைந்த குளுமாட்டுச் சந்தி கடைத்தொகுதியினை 2022ஆம் ஆண்டு ஆனி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரை நடாத்து வதற்கான கேள்விகள் 2022.05.25ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்படிவங்கள் கீழ்க்காட்டப்படும் கேள்விப் பிணைப்பணம், கேள்விப் பத்திரக் கட்டணம் ஆகியவைகளைச் செலுத்தி இவ்வலுவலகத்தில் 2022.05.25ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் படிவங்களில் ஒரு பிரதி **தலைவர்,வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா"** என்ற முகவரிக்கும், ஒரு பிரதி **"பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், பூங்கா வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கும் இடப்பட்டு, பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகக் கையளிக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எதற்கான கேள்வி எனக் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பிட்ட திகதிக்குப் பின்னரோ நேரத்திற்குப் பின்னரோ கிடைக்கும் கேள்விகள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

2022.05.25ஆம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும். கேள்விகள் திறந்து பரிசீலனை செய்யப்படும்போது கேள்விதாரர் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரமளிக்கப்பட்டவர் சமூகமாக இருக்க அனுமதிக்கப்படும்.

விண்ணப்பதாரர் இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை, செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் நேரடியாக சமூகமளித்து பெற்றுக்கொள்ளலாம். கேள்வி தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் வழங்கப்படும்.

| கடை விபரம் | மாதவாடகை | கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|
| மீன் கடை 01 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 02 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 03 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 04 | 2000.00 | 1,000.00 |
| மீன் கடை 05 | 1500.00 | 1,000.00 |
| மீன் கடை 06 | 1500.00 | 1000.00 |
| மீன்கடை 07 | 1500.00 | 1000.00 |
| மீன் கடை 08 | 1500.00 | 1000.00 |
| கடை 09 | 2000.00 | 1000.00 |

**திரு.தர்மலிங்கம் யோகராஜா,**
**தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை.**
**18.05.2022**

(cr.35987) (2.6)



## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 12 . 1954

மறைவு 18 . 05 . 2022

### திரு.சந்திரராசா கணேசலிங்கம் (இராசு)

சட்டநாதர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சந்திரராசா கணேசலிங்கம் அவர்கள் நேற்று (18.05.2022) புதன்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரராசா இராசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற ஜெயராணி அவர்களின் அன்புக் கணவரும், சுகனியா (சட்டத்தரணி), டற்சிகன் (QS- மொறட்டுவ பல்கலைக்கழகம்), குலரூபன் (பழைய மாணவன் கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தூரன் (மின் இணைப்பாளர்) அவர்களின் அன்பு மாமனாரும் ஆராதனாவின் அன்புப்பேரனும், பராசக்தி, சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சண்முகநாதன், புவனேஸ்வரி, யோகலிங்கம் (ஜேர்மனி), திலகராணி, சந்திரா (சுவிஸ்), ஜெயலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2022) அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் பிற்பகல் 4.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சுகனியா - 077 515 2082
டற்சிகன் - 077 695 6083
குலரூபன் - 077 201 9028

தகவல்:
குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன்

[ வரி மதிப்பீட்டாளர் - யாழ் மாநகரசபை ]

கேசாவில் வீதி வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் முருகமூர்த்தி வீதி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன் நேற்று (18.05.2022) புதன்கிழமை அகால மரணம் எய்தினார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.**

12 முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.
077 570 2512


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HOMEVISIT CLASSES

ENGLISH / TAMIL MEDIUM

ACCOUNTING, GEO, CITIZ, HIS

ENG', LANG - FOR ANY GRADE

**077 331 6402**



## வேலையாள் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் தனியார் பண்ணைக்கு வேலையாள் தேவை. பொருத்தமானவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 142 3685**


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 12 . 07 . 1986

விண்ணில் 19 . 05 . 2019

அமரர்

### முருகையா முகுந்தராஜ் (முகுந்தன்)


அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்தாய்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தாய்
ஏனோ இறைவன் இடை நடுவில்
பறித்து விட்டான் உன்னை
இன்முகம் காட்டி எம்மையெல்லாம்
வாழ வைத்த தெய்வமே
நீ எங்களை விட்டு சென்று
மூன்றாண்டுகள் ஆயினும்
நாம் வாழும் காலம் வரை
உன் நினைவலைகளை
சுமந்து வாழ்கின்றோம்...

பொற்பதி, கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 12 . 1997



மறைவு 17 . 05 . 2022

### மகேந்திரன் மகிந்தன்

கோப்பாய் வடக்கு, பூதர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரன் மகிந்தன் அவர்கள் கடந்த (17.05.2022) அன்று அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.05.2022) வியாழக் கிழமை மு.ப. 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 869) 1/6

தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் ஆ.சி.நாகம்மா

தோற்றம் 21.05.1924

மறைவு 31.05.2021

திதி: 20.05.2022



வெள்ளை முடி அழகி
கள்ளம் கபடம் இல்லா சிரிப்பழகி
எல்லோரையும் கவரும் பேரழகி

வயல் வரம்பிலே
உம் கையால்
ஒரு உருண்டை சோறு
தந்திடுமே பல இன்பம் நூறு

உம் உடம்பினிலே
நாம் கண்டோம் பல சுருக்கங்கள்
ஆனால் உன் அன்பினிலே
எவரும் காணவில்லை கருக்கங்கள்


தள்ளாடும் உன் நடையும்
கபடம் இல்லா உன் சிரிப்பும்
விலை மதிப்பற்றவை...
எமக்கு இன்னொரு
பிறப்பு இருக்க வேண்டும்
அப்பிறப்பிலும் உனது உறவாய்
இருக்கவேண்டும்...

மதவடி வீதி,
வீமன்காமம்
தெற்கு.

(cs.44603) (2.6)

அம்மாவின் பிரிவை
தாங்கமுடியாமல் தவிக்கும்
குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 26.09.1989

உதிர்வு 22.05.2019

### ஜெகதீஸ்வரன் உமேஸ்

**திதி: 19.05.2022**

மறைந்தும் மலர் முகம் காட்டும் மகனே
உன் நினைவால் செய்யப்படும் பொதுப்
பணிகள் மூலம் பயனடையும் மக்கள்
முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியில் உன்
மறைவை நாங்கள் மறக்கின்றோம்.

அன்னாரின் நினைவாக பொதுமக்களுக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் அவரின் பிறந்த நாளான **26.09.2021** இல் தொடங்கி வைக்கப்பட்டது. அவரின் நினைவாக அமைக்கப்பட்டு வரும் உமேஸ் ஞாபகார்த்த பொது நோக்கு மண்டபத்தின் ஒரு பகுதி அன்னாரின் நினைவு தினமான **22.05.2022** அன்று பொது மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படுகின்றது.

திரு. திருமதி ஜெகதீஸ்வரன்

இல.35,
[illegible] மேற்கு வீதி,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை.

(CS 44712) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாயிராம்

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 . 10 . 1951



உதிர்வு 19 . 05 . 2021

அமரர்

## ஜெயலஷ்மி குகபாஸ்கரன்

உன் நினைவென்றும் எம்மை
உன் நினைப்பிலேயே நிச்சயமாய் உறைந்திருக்கும்
வானுலக வாழ்வில் ஓராண்டு கடந்தாலும்
எம் நினைவுலக வாழ்வில் என்றும்
அழியாத ஓவியமாய் நீயே!

தொடர்பு: குகபாஸ்கரன் 071 605 8812

என்றும் உந்தன் நினைவகலாத குடும்பத்தினர்

(cr.35986 (2.6)

# இருபத்தைந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 04 . 11 . 1946



விண்ணில் 19 . 05 . 1997

அமரர்

## சின்னப்பு அரசரட்ணம் ஜெயநாயகம்

*"இது முதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறுபெற்றோர்"* (தி.வெ.14:13)

அசல் முன் நிழல் போல்
வழிகாட்டிய அப்பாவே!
பாதி வழியில் எங்குசென்றாய்?
ஐ ஐந்து ஆண்டுகள் ஆனாலும்
ஆறாது நம் துயர்!
கடவுள் போல் எம்முடன்
இருக்கின்றாய் நீ - வேண்டும்
உன் ஆசீர்வாதங்கள்!

மல்வம், உடுவில். குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



## திரு.வயித்திலிங்கம் பேரின்பநாயகம்

(தலைவர்- அகில இலங்கை திருமுறை மன்றம், தலைவர் பசுக்கள், இடபங்கள் பாதுகாப்பு மன்றம்)

அத்திமுகத்தவன் அருள் பெற்றுப்
பத்திமுகத்தையுடையவராகி தித்திக்கும் தீந்தமிழால் திருமுறையை
ஓதும் அருள் பெற்றவராகி எத்திக்கும் சைவமும் தமிழும் வாழவேண்டும்
என்று வாழ்ந்தவராகி இறைவன் திருவடியில் திளைக்கும் தங்கள் புகழைச்
சொல்லுவதறியா அடியோம்.

**அகில இலங்கைத் திருமுறைமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(cs44739) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 02 . 1943



மறைவு 17 . 05 . 2022

## திரு. வயித்திலிங்கம் பேரின்பநாயகம்

(ஓய்வுபெற்ற காசாளர் - சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தலைவர்-அகில இலங்கை திருமுறை மன்றம்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வயித்திலிங்கம் பேரின்பநாயகம் நேற்றுமுன்தினம் (17.05.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்திலிங்கம் - ஆசைப்பிள்ளை தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், புஸ்பராணி (கனடா), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (பவளம்) மற்றும் கனகாம்பிகை, கெங்காதரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சற்குணராஜா மற்றும் செல்வநாயகி (தேவி - இந்தியா), நாகராஜா, ராசமலர், பாக்கியம் (கனடா), காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் பஞ்சாட்சரம் (ஜேர்மனி), வேலாயுதம் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற செல்வரட்ணம் அவர்களின் சகலனும், சாந்தினி, இராஜேஸ்வரி, ரவீந்திராதேவி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், Dr. தாரிணி, சண்முகராஜா (கனடா), சேந்தன் (QS அபுதாபி), சோமேசன் (QS & முகாமையாளர் JBC), Dr.கிருபாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr. குருபரன், நேமிலா (கனடா), விஜயரதி (அபுதாபி), பிரவீணா, Eng. சிவகுமார் ஆகியோரின் மாமனாரும், சங்கரன், சாரங்கன், சஜிந், சைலஜன், சாருஜன், லக்ஷனா, கேஷிகன், நவினன், சிவானி, சிவானுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.900, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் அவரது இல்லத்தில் நாளை (20.05.2022) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணி தொடக்கம் நடைபெற்று, தகனக்கிரியைகள் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

**தகவல்:**

பே.சோமேசன் (மகன் - 077 444 1916)
கு.தாரிணி (மகள் - 077 734 8676)
சி.கிருபாலினி (மகள் - 077 673 6887)

(cs.44785) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருக்கடிகளைப்...

காப்பில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. நாம் அதனை ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச.

பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட போர் வெற்றியைக் கொண்டாடும் விதமாக அரசாங்கம் கொண்டாடும் தேசிய போர் வீரர் தினத்தை முன்னிட்டு விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்று நாம் எதிர்நோக்கும் நெருக்கடியான நிலை நம்மில் எவரும் எதிர்பார்த்தது அல்ல, பொருளாதார நெருக்கடியானது, அரசியல் மற்றும் சமூக சிக்கலான நிலைவரை வியாபித்தது. ஆயினும், இந்த நாட்டின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்துக்கான கொள்கையை நாங்கள் குறைத்து மதிப்பிடமாட்டோம். ஏனென்றால் எல்லாவற்றுக்கும் மேலாக தாய் நாட்டைக் காக்க வேண்டும் என்ற அபிலாஷை இருப்பதனால் ஆகும்.

வரலாற்றில் பல சவாலான காலகட்டங்களையும் சந்தர்ப்பங்களையும் நாம் கடந்து வந்திருக்கிறோம். அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேசபிமானிகள் எப்போதும் முன்னிலை வகித்தனர் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்தக் குழு நாட்டின் ஒட்டுமொத்த படை வீரரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. எனவே, தற்போதைய சவாலை இன்னும் உன்னிப்பாகப் பார்க்கும் பொறுப்பை வரலாறு உங்களுக்கு வழங்கியுள்ளது என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு குழுக்களும் தனிநபர்களும் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியை ஒரு காரணமாகப் பயன்படுத்தி, தேசிய பாதுகாப்பில் அழுத்தங்களைப் பிரயோகிக்க முயற்சிக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. நாம் அதனை ஒன்றுபட்டு முறியடிக்கவேண்டும். அப்போதுதான் துணிச்சலான போர் வீரனின் நாட்டுக்கான அர்ப்பணிப்பு பாதுகாக்கப்படும் - என்றுள்ளது. (அ-எ-இ)

## முள்ளிவாய்க்காலில்...

பொதுச் சுடர் ஏற்றப்பட்ட பின்னர் அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் சுடர்களை ஏற்றித் தங்கள் உறவுகளை நினைந்துருகி, மலர் தூவி அஞ்சலித்தனர். அங்கு கூடியிருந்தவர்கள் தங்கள் உறவுகளை நினைத்துக் கண்ணீர் விட்டுக் கதறி அழுததால் அந்த இடமே சோகமயமாக மாறியது.

அத்தோடு போரின் இறுதிநாள்களை நினைவுகூரும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் எல்லோருக்கும் பகிரப்பட்டது. 2009ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம், தமிழ் மக்கள் மீது கொடூரமான போரைத் தொடுத்தது. இலங்கை இராணுவத்தினின் ஈவிரக்கமற்ற தாக்குதல்களில் தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு வலயம் என்று ஏமாற்றி தமிழ் மக்கள் குறுகிய பகுதிக்கு அழைக்கப்பட்டு எறிகணைகளாலும், விமானத் தாக்குதல்களாலும் உடல் சிதறடிக்கப்பட்டனர். சர்வதேசத்தின் ஆதரவுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் மௌனிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் மனங்களில் மாறாத வடுவாக மாறியுள்ள அந்தப் படுகொலைகள் நடந்து 13 ஆண்டுகள் கழிந்துள்ள நிலையில், ஆண்டுதோறும் மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த ஆண்டுகளில் நினைவேந்தலுக்கு ராஜபக்ச அரசாங்கம் கடும் தடைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், நேற்று ஓரளவுக்கு ஆசுவாசமான நிலைமை காணப்பட்டது. ஆயினும் பல இடங்களில் நினைவேந்தல்களுக்கு இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்றும் பொதுமக்கள் கூறுகின்றனர். (அ-எ)

## இனப்படுகொலைப்...

வகையில் சுடரேற்றும் ஒளிப்படம் ஒன்றையும் பகிர்ந்துள்ளார்.

நேற்று தமிழ் மக்கள் இனவழிப்புப் போரில் உயிரிழந்தவர்களை முள்ளிவாய்க்காலிலும், தமிழர்கள் வாழுமிடங்களிலும் அஞ்சலித்திருந்தனர். கொழும்பு காலிமுகத் திடலிலும், நினைவேந்தல் நடத்தப்பட்டிருந்தது. அதேநேரம், தெற்கில் போர் வெற்றியைக் கொண்டாடும் நிகழ்வுகள் நடைபெறுவது வழமை. இந்தநிலையில், முன்னாள் ஜனாதிபதி தனது பேஸ்புக் பக்கத்தில், ‘முப்பது வருட இனப்படுகொலை போரால் நாம் இழந்தவை ஏராளம். வடக்கு மற்றும் தெற்கில் உள்ள தாய்மார்கள் குழந்தைகளை இழந்துள்ளனர். பிள்ளைகள் பெற்றோரை இழந்தனர். சிங்களவர், தமிழர், முஸ்லிம் என அனைவருக்கும் இழப்புக்களே. போரால் நானும் ஒரு கண்ணை இழந்தேன். இன்னும் பல இழப்புகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. நாங்கள் சிங்களவர் தமிழர் முஸ்லிம்கள் என்று பிரிந்து போயுள்ளோம்.

போரின் முடிவைக் கொண்டாடும் இந்த வேளையில் நாம், வெறுப்புக்குப் பதிலாக அன்பைக் காட்டுவோம். பழிவாங்குவதற்கு பதிலாக, மன்னிப்போம். பிரிந்து கிடப்பதை விடுத்து ஒருவருக்கொருவர் ஆறுதலாக இருப்போம். இன்றைய நாளை உறுதியும் அமைதியும் கொண்ட நாளாக ஆக்குவோம். தீசகோதரத்துவத்தில் எழுந்து நிற்போம். இருளாக இருந்த எங்கள் நாட்டை சகவாழ்வெனும் விளக்கினால் ஒளியேற்றுவோம்.' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு மரணித்தோரை நினைவுகூரும் வகையில் தீபமேற்றும் புகைப்படத்தையும் அவர் வெளியிட்டுள்ளார். (அ-எ)

## கோத்தாபய...

துக்கு இணக்கம் தெரிவிக்கப்படும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்சி சார்பற்ற அரசாங்கத்தை உருவாக்குவது மற்றும் நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் அனுப்பிய கடிதத்துக்குப் பதிலளிக்கும் வகையில், பிரதமர் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது:-

அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்தை விரைவில் நிறைவேற்றுவதன்மூலம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையின் அதிகாரங்களை மட்டுப்படுத்தி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறக்கூடிய நிறைவேற்று அதிகாரமொன்றை உருவாக்க எதிர்பார்த்துள்ளேன். 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக கலாநிதி விஜயதாச ராஜபக்ஸ தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், விரைவில் திருத்தங்கள் நிறைவேற்றப்படும் என்று நம்புகின்றேன்.

நாட்டை ஸ்திரப்படுத்தியவுடன் பொதுத் தேர்தலை நடத்துவதில் ஆட்சேபணை இல்லை. ஆயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு அர்ப்பணிப்புடனும் கூட்டாகவும் செயற்பட்டு நாட்டை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர வேண்டும். கட்சி சார்பற்ற அரசாங்கத்தை அமைப்பதற்கு உங்கள் ஆதரவைக் கோருகின்றேன் - என்றுள்ளது. (அ-எ-இ)

## தமிழக...

மு.க.ஸ்டாலின் கொடி அசைத்து ஆரம்பித்து வைத்தார்.

முதற்கட்டமாக, 8.84 கோடி ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள், 123 கோடி ரூபா பெறுமதியான (இந்திய நாணய மதிப்பு) பொருள்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டமாக 22ஆம் திகதி மேலும் சில நிவாரணப் பொருள்கள் இலங்கைக்கு அனுப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-எ-இ)

## இலங்கை...

நீதிக்கான திட்டம் வலியுறுத்தியுள்ளது. சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் தலைவர் ஜஸ்மின் சூக்கா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது:-

சர்வதேச சட்ட அதிகாரத்துக்கு உட்பட்ட வழக்குகளை ஆரம்பிப்பதையும் தடைகள் கொண்டு வரப்படுவதையும் ஏதுவாக்கத்தக்க வகையில் பெரும் வன்கொடுமைக் குற்றங்கள் பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் ஊழல்கள் ஆகியவற்றின்மீது குற்றவியல் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு குடிமக்களுக்கு சர்வதேச சமூகம் உதவ முன்வரவேண்டும்.

இலங்கையில் முழுமையான சீர்திருத்தங்கள் கொண்டுவரப்படவேண்டும் என முன்வைக்கப்படும் கோரிக்கைகள் வெறுமனே அதிகார வர்க்கத்தால் மேற்கொள்ளப்படும் ஊழலையும், பொருளாதாரக் குற்றங்களையும் மட்டுமே கையாள்வதற்கானதாக அல்லாமல் பெரும் வன்கொடுமைக் குற்றங்களிலில் ஈடுபட்டு தண்டனை பெறமால் தப்பியிருப்போர் தொடர்பிலும் தமிழர்களது நீதிக்கும் பொறுப்புக்கூறலுக்குமான நீண்ட போராட்டத்துக்கும் தீர்வு வழங்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்ட 2009 இறுதிப்போரின் இந்தச் சோகமான ஆண்டு தினத்தை நினைவுகூரும் தமிழ் மக்களுடன் நாமும் கைகோர்த்து நிற்கின்றோம். பல தசாப்தங்களாகத் தொடர்ந்து வந்த பாரதூரமான சர்வதேசகுற்றச்செயல்களுக்கான தண்டனைகளிலிருந்து விலக்களிக்கும் நடைமுறையானது. ஊழல் மற்றும் பொருளாதாரக் குற்றங்களுக்கும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் நடைமுறைக்கு இட்டுச் சென்று வரலாற்றின் மிக இக்கட்டான நிலைக்கு இலங்கையை இன்று கொண்டுசென்றுள்ளது. இன்று இலங்கையில் நிலவும் இந்தப் பரிதாபகரமான நிலைமைக்கு இதுவே காரணமாகும். தற்போதுள்ள தேவை நீதியும் பொறுப்புக்கூறலுமேயாகும். ஆனால் இலங்கை தொடர்ச்சியாக அதைச் செய்வதற்கு விருப்பமற்று இருந்து வந்துள்ளது. சர்வதேசசட்ட அதிகாரத்துக்குட்பட்ட வழக்குகளை ஆரம்பிப்பதையும் தடைகள் கொண்டு வருவதையும் ஏதுவாக்கத்தக்க வகையில் பெரும்வன்கொடுமைக் குற்றங்கள் பொருளாதாரக் குற்றங்கள் மற்றும் ஊழல்கள் ஆகியவற்றின்மீது குற்றவியல் விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு குடிமக்களுக்கு சர்வதேச சமூகம் உதவ முன்வரவேண்டும் - என்றுள்ளது. (அ-எ-இ)

## மொட்டு...

9ஆம் திகதி அலரி மாளிகை முன்பாகவும், காலிமுகத்திடலிலும் நடந்த வன்முறைகள் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நால்வரையும் எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க கோட்டை நீதிமன்றம் உத்தரவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட நிலையில், மேல்மாகாண சபை உறுப்பினர் அமல் சில்வா மற்றும் தெஹிவளை - கல்கிசை மாநகர சபையின் ஊழியர் ஒருவரும், இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, நீதிமன்று விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.

இந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக சீதாவக்க பிரதேசசபையின் தலைவர் ஜயந்த ரோஹண கொழும்பிலும், களனி பிரதேசசபை உறுப்பினர் மஞ்சுள பிரசன்ன களனியிலும் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் சரணடைந்த மொரட்டுவ மாநகர சபையின் முதல்வர் சமன்லால் பெர்னாண்டோவும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனக ஹேரத் மற்றும் தாரக பாலசூரிய ஆகியோரின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களுக்கு கேகாலை நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது. (எ-இ)

## தென்னை...

இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது. வண்ணார்பண்ணை, முருகமூர்த்தி வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஏகாம்பரநாதன் (வயது-80) என்பவரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

இவர் தனது வீட்டு முற்றத்தில் கதிரையில் அமர்ந்திருந்தபோது, பலத்த காற்றால் தென்னைமரம் பாறி வீழ்ந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## குளத்தில்...

இந்தச் சம்பவம் நேற்று மாலை நடந்துள்ளது.

சுமாங்குளத்தைச் சேர்ந்த ஆ.தங்கவேல் என்பவரே உயிரிழந்துள்ளார்.

குளப்பகுதியில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த முதியவர், திடீரென நிலைதடுமாறி குளத்துக்குள் வீழ்ந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு வவுனியா மருத்துவமனையில் சேர்ப்பித்தபோதும், சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-எ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகவிகாரைக்காகவே ஆரியகுளம் சீரமைப்பு

## கஜேந்திரகுமார் கண்டுபிடிப்பு



யாழ்ப்பாணம், மே 19

நாகவிகாரைப் பிக்குவின் கோரிக்கைக்கமையவே ஆரியகுளம் புனரமைக்கப்பட்டது. நாக விகாரைக்கு வந்து செல்பவர்களின் பொழுதுபோக்கு வசதிக்காகவே அது புனரமைக்கப்பட்டது. அதனை நிறைவேற்றவே ஆளுநரும் முற்படுகின்றார் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். ஆரியகுளத்தில் வெசாக்கூடுகளைக் கட்ட அனுமதிக்காவிட்டால், யாழ். மாநகர சபையைக் கலைக்க நேரிடும் என்று வடமாகாண ஆளுநர் எச்சரிக்கை விடுத்தமை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

இனவெறி கொண்ட ஜனாதிபதியின் தயவில் இருக்கின்ற வடக்கு மாகாண ஆளுநரின் கருத்தை நாம் கண்டிக்கின்றோம். தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டு சிங்களத் தேசியவாதத்துக்கு முண்டு கொடுத்து நல்ல பிள்ளைக்கு நடிக்கத் தொடங்கி சிலர் மாட்டிக் கொண்டுள்ளனர். யாழ்ப்பாண கலாசார நிலையத்துக்கு அருகில் இருக்கின்ற குளத்தைப் புனரமைத்திருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்கும். அதைச் செய்யாமல் இராணுவத்தினரின் முழு ஒத்துழைப்புடன் செயற்படும் ஒருவரின் நிதியுதவியுடன் ஆரியகுளம் புனரமைக்கப்பட்டது. இனால் எமக்கு என்ன பயன்? -என்றார்.

(க-20)


### மணமக்கள் தேவை

உள்நாட்டில் அரச உத்தியோகம் எதிர்பார்க்கும் மணமக்கள் தேவை.

077 120 4651, 077 120 4652

### வீடு வாடகைக்குத் தேவை

உரும்பிராயை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

070 700 0443

### பெண் வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம், நெல்லியடி, கிளிநொச்சியில் இயங்கும் Lovely Flower Cent கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

077 400 5023, 074 288 5023

### வீடு வாடகைக்கு

இல.464, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் இணைந்த குளியலறைகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள், அலுவலகங்கள் விரும்பத்தக்கது.

077 855 4609

### வீடு வாடகைக்கு

சுன்னாகம் Dr.சுப்பிரமணியம் வீதி. (றோமன் கத்தோலிக்க பாடசாலை அருகாமையில்) அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்களும் விரும்பத்தக்கது

தொடர்பு: 076 313 6371

Viber : 076 323 2533

(cs 44726) (2.6)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

மருதனார்மடம் ஆஞ்சநேயர் கோவில் பஸ்நிலையத்திற்கு முன்பாக காரிலிருந்து விழுந்த உடுப்புப்பை ஒன்று (16.05.2022) கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அடையாளத்தை காட்டி கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

தொடர்பு: 077 554 3111




## உமாசுதனின் 'அவதாரம்' சிறுகதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 19

பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ஜே.உமாசுதன் எழுதிய 'அவதாரம்' என்ற சிறுகதை நூல் வெளியீடு யாழ்.இந்துக் கல்லூரி சபாலிங்கம் கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் நூல் நயப்புரையை யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறன், சமுதாய மருத்துவ நிபுணர் எஸ்.சிவகணேஸ் ஆகியோரும் நூல் வெளியீட்டுரையை ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் மீரா அருள்நேசனும் ஆற்றினர்.

அத்துடன் யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் நூலை வெளியிட்டு வைக்க நூலாசிரியரின் பெற்றோர் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டனர்.

(ம-14)


### காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்தியில் 22 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- A 32, A9 இணையும் பிரதான வீதியில் (றவுண்டப் வோட் )
- A9 வீதியுடன் 6 பரப்பும்.
- A9 பிரதான வீதியில் இருந்து 18அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 1½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- மருந்தகங்கள் அமைப்பதற்கும் (பார்மசி)
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம் :**
**காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**
தரகர் தேவையில்லை


**தொடர்புகளுக்கு : ஜெயம்**

077 814 7389, 077 241 7589


# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 05 . 1956

மறைவு 16 . 05 . 2022



## இராசா பொன்குமார்

(உரிமையாளர் - ஜங்கரன் வெதுப்பகம் - K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச்சந்தி, சரஸ்வதிவிலாஸ் கோப்பாய்ச் சந்தி)

இலக்கம் 30, சீனியர் ஒழுங்கை, கலட்டி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கு, முழுங்காவில், கலட்டி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட இராசா பொன்குமார் கடந்த (16.05.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் (ஜங்கரன் வெதுப்பகம் - K.K.S. வீதி, தட்டாதெருச்சந்தி, பருத்தித்துறை வீதி, கோப்பாய்ச் சந்தி, சரஸ்வதிவிலாஸ் கோப்பாய்ச் சந்தி - உரிமையாளரும்) காலஞ்சென்றவர்களான இராசா - தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் - நவரத்தினம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், திருமுறைச்செல்வி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான விஜயநந்தன், குலசிங்கம், இரஞ்சினிதேவி மற்றும் சீதாதேவி (கனடா), பத்மலக்சுமி (கனடா), ஸ்ரீகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகிந்தராஜா (லண்டன்), பபிலா (லண்டன்), அகிலா (ஆசிரியர் - கிளி/ முழுங்காவில் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஜலக்சி (கனடா), ஜெயக்குமார் (லண்டன்), சிவசந்திரன் (ஆசிரியர் -யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கமலாம்பிகை (கனடா), ராமகிருஷ்ண பிரசாத் (கனடா), சித்திரகலா (ஜேர்மனி), திருநாதன் (கனடா), சிவநாதன் (கனடா), மாலினி (வவுனியா), வாசுகி (பிரான்ஸ்) மற்றும் காலஞ்சென்றவர்களான யோகநாதன், பவானி, நந்தினி, ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோகுல்நாத் (லண்டன்), திருராஜ் (லண்டன்), கிஷான் (லண்டன்), அக்ஷிகா (யா/ யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), கிஷானிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **இன்று (19.05.2022) வியாழக்கிழமை நண்பகல்12.00 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 2.00 மணியளவில்** பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

| | |
|---|---|
| அகிலா | - 021 222 1624, 077 138 5565 |
| சிவசந்திரன் | - 077 669 9920 |
| பபிலா | - 0044 747 662 2045 |
| மகிந்தராஜா | - 0044 771 347 0016 |
| ஜெயக்குமார் | - 0044 740 310 7461 |

தகவல் : குடும்பத்தினர்

(cs 44721998)


### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 42 பரப்புக் காணிவிற்பனைக்கு.




- ✓இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- ✓கைதடி சித்த போதனா வைத்தியசாலை, யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடம் கிழக்கு எல்லைகள்
- ✓சமுர்த்தி வங்கி வடக்கு எல்லை.
- ✓கைதடி சந்தி **200 M** தூரம்
- ✓வட மாகாண சபை அலுவலகம் 250 மீற்றர் தூரம்.
- ✓மூன்று வழி பாதையுடன்
  - 01- A-09 வீதி 100 மீற்றர் (16 அடி பாதையுடன்)
  - 02- கைதடி கோப்பாய் வீதி 50 மீற்றர் தூரம் (20 அடி பாதையுடன்)
  - 03- சமுர்த்தி வங்கி அருகாமை **100 M** தூரம் (16 அடி பாதையுடன்)
- ✓சுற்றி நல்ல சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- ✓செம்மண் காணி.

தொடர்பு: 077 6234 204
077 2880 152
076 6583 621

(CS 877) 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.